
**மின்தமிழன் நா.கண்ணனின் நூல்கள்**

[place your orders @ https://pages.razorpay.com/KannanNoolgal]

# வேர் கொண்டு விண் எழுதல்

# *வேர் கொண்டு விண் எழுதல்*




அயலக வாழ்வின் ஆதார தொனி என்பது எவ்வாறு வேர் கொண்டு விண் எழுதல் என்பது. விண்ணகம் போலுள்ள அயலக வாழ்வின் சுகங்களை அனுபவிக்கும் நேரத்தில் வேரின் சுகம் விடாமல், அதன் மணம் போகாமல், நம் அடையாளம் அழிந்துவிடாமல் எப்படி வாழ்வது என்பதே சவால். சொர்க்கமே என்றாலும் நம்ம ஊரு போலாகுமா? எனும் நனவிடை தோய்தல். ஒரு தல யாத்திரை கொள்ளத்தக்க அளவில் அமெரிக்காவில் இருக்கும் பெரும் தமிழ்க் கோயில்கள் பற்றிப் பேசுகிறது ஒரு கட்டுரை. இந்த நூல் மிக, மிக முக்கியமான ஓர் கற்காலத்தமிழனின் ஓவியம் பற்றிப் பேசுகிறது. எப்படி இவ்வோவியம் அப்படியே எகிப்தின் பிரமிடுகளில் காணப்படும் ஓவியத்தை ஒத்திருக்கிறது, அதன் வானியல் நுட்பங்கள் என்ன என்று அலசுகிறது.

1. வான்புகழ் வள்ளுவம்
2. சொர்க்கமே என்றாலும்?
3. அமெரிக்கத் தலயாத்திரை
4. ஸ்ரீரங்கம் மோகனரங்கனின் அறிவும் நம்பிக்கையும் புத்தகம் எழுப்பும் எண்ணங்கள்
5. எகிப்தைச் சுட்டும் திருமலை கற்கால ஓவியம்
6. ஆலமாய் நின்ற மரத்தின் காய்ந்த விழுதுகள்
7. தாயகம் கடந்த தமிழ் இலக்கியத்தில் தமிழ் மனம்: வேர் கொண்டு விண் எழுதல்
8. ஜகாட் - திரை விமர்சனம்
9. ஐயர் ஒரு சகாப்தம்
10. நோர்வேயின் அபஸ்வரம்!

11. குறும்பூங்கோதை மகளிர் - நற்றிணைக் காட்சிகள்
12. யோகமெனும் வாழ்வியல்
13. மால்_Mall எனும் உலகம்!
14. பாடல் போட்டி (சூப்பர் சிங்கர்ஸ் 3) தரும் பாடங்கள்
15. மூன்றாம் பால்
16. ஒலிக்கும் மின்னஞ்சல்
17. மனித உணவுப்பழக்கத்தில் சமயத்தின் பங்கு
18. பஜனை செய்வோம் கண்ணன் நாமம்
19. தென்றல் நேர்காணல்

## நா.கண்ணன் பல்வேறு முகங்களுடன் தமிழர்களுக்கு அறிமுகமாகிறார்

புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அவரொரு சிறுகதை, கட்டுரை ஆசிரியர் என்றே தெரியும். இதுவரை ஒன்பது நூல்கள் கொண்டு வந்திருக்கிறார். உதிர் இலை காலம் (1998); நிழல் வெளி மாந்தர் (2004); விலைபோகும் நினைவுகள் (2004), தூரத்து மணியோசை (2015), கொரியாவின் தமிழ் ராணி (2018), கடல்வெளி (2018), தென் தமிழின் பத்துக்கட்டளைகள் (2018), பக்தியின் பன்முகம் (2020). இவரது கவிதைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எலியாகியுள்ளன, ஆயினும் இன்னும் பல இலத்திரன் வடிவில் (electronic text) இணையத்தில் உள்ளன. இவர் 1978-லிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார். இவரது படைப்புகள் கணையாழி, சுபமங்களா, குங்குமம், இந்தியா டுடே, புதிய பார்வை போன்ற இந்திய சஞ்சிகைகளிலும், மௌனம், நாழிகை, உயிர்நிழல் போன்ற புகலிட இதழ்களிலும் வந்திருக்கின்றன. இவர் ஐரோப்பிய இலக்கிய சந்திப்புகளிலும் கலந்து கொண்டு பங்களிப்பு செய்துள்ளார்.

இவரை சிலருக்கு இணைய எழுத்தாளரென்றே தெரியும். தமிழ் இணையம் என்பது தோன்றிய காலத்திலிருந்து எழுதிக்கொண்டிருக்கிறார். இன்றளவில் இலத்திரன் எழுத்தாக மிக அதிகமாக எழுதியிருக்கும் தமிழர்களில் இவரும் ஒருவர். இவர் இ-சுவடி மடலாடற்குழு மட்டுறுத்தர். பல மடலாடற்குழுக்களில் தொடர்ந்து எழுதி வருபவர். இ-மொழி என்றொரு வலைத்தளம் அமைத்து அதில் தனது எழுத்து சார்ந்த நடவடிக்கைகளை இலக்க வடிவில் பாதுகாத்து வருகிறார். வலைப்பூ என்றும் வலைப்பதிவென்றும் அழைக்கபடும் Webblog பதிவில் Power Blogger என்றழைக்கப்படுகிறார். இவர் மூன்று பதிவுகள் வைத்திருக்கிறார். கவிதைக்கொன்று, உரைநடைக்கொன்று, புகைப்படக் கலைக்கொன்று மூன்று பதிவுகள். இது தவிர இணைய இலக்க தொழில் நுட்பத்தில் இயங்கும் தமிழ் மரபு அறக்கட்டளை எனும் அமைப்பை உருவாக்கி, சர்வதேச வல்லுநர் குழுவுடன் நிருவகித்து வருகிறார். மதுரைத்திட்டம் எனும் அமைப்பின் ஐரோப்பிய ஒருங்கமைப்பாளராக செயல்பட்டார். உத்தமம் எனும் சர்வதேச தகவல் தொழில்நுட்ப

அமைப்பின் ஐரோப்பிய பிரதிநிதியாக இருந்திருக்கிறார். இணையப் பல்கலைக் கழகத்தின் கௌரவ ஆசிரியர்களுள் ஒருவராக இருந்திருக்கிறார். கணையாழி ஆசிரியர் குழுவில் இருந்திருக்கிறார்.

பாசுர மடல் எனும் தொடர் கட்டுரைகள் மூலம் இவரது ஆன்மீக ஈடுபாடு தமிழ் உலகிற்கு தெரிய வந்தது. 'இலக்கியத்தின் எல்லை நிலம் ஆன்மீகமே' என்று கூறும் இவர் பல ஐரோப்பிய ஆலயங்களில் சமயம் தொடர்பான சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார். ஸ்டுட்கார்டு விநாயக ஆலயத்தின் வளர்ச்சியில் பங்கேற்றுள்ளார். சுவிஸ் தேசத்தில் நடந்த கம்பன் விழாவில் பங்கேற்றுள்ளார். தொடர்ந்து இணையத்தில் ஆன்மீகக் கட்டுரைகள் படைத்து வருகிறார்.

திருச்சி வானொலி நிலையத்தில் சில ஆண்டுகள் தொடர்ந்து அறிவியல் நிகழ்ச்சிகள் அளித்துள்ள இவர் உண்மையில் ஒரு மல்டிமீடியா ஆசாமி. பிரபலங்களுடன் இணைந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அளித்துள்ளார். உம். சுஜாதா, யூகி சேது. இந்திய, ஐரோப்பிய தொலைக்காட்சியில் பலமுறை நிகழ்ச்சிகள் அளித்துள்ளார்.

இத்தனை முகங்களிலும் அதிகம் தெரியாத முகம், இவரது விஞ்ஞான முகம். இவர் இருமுறை கலாநிதி (டாக்டர்) பட்டம் வாங்கிய தொழில்முறை விஞ்ஞானி. உலகின் ஆகச்சிறந்த ஆய்வகங்களில் சூழலியல் தொடர்பான ஆய்வுகள் நடத்திய டாக்டர்.என்.கண்ணன், உலகின் ம்கிகச்சிறைந்த் முதல் பத்து பேராசிரியருள், விஞ்ஞானிகளுள் ஒருவராக அடையாளம் காணப்படுகிறார். தற்போது ஓய்வு பெற்று செங்கல்பட்டில் வசித்து வருகிறார்.

இந்த நூல்களை கீழுள்ள சுட்டியின் மூலம் பதிப்பகத்தாரிடமிருந்து நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம். இந்தியாவெங்கும் தபால் செலவு இனாம். அயலக ஆர்டர்களின் செலவுக்கணக்கை பதிப்பகத்தாரிடமிருந்து அறிந்து கொள்ளவும்.

https://pages.razorpay.com/KannanNoolgal